# சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் முதுநிலை மருத்துவர்களுக்கான சுகாதார செயல்பாடுகள் குறித்த பயிற்சி

## மேயர் ஆர்.பிரியா துவக்கி வைத்தார்



**சென்னை,ஜூலை.05**

சென்னை மாநகராட்சியின் சுகாதாரச் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, மாநகராட்சி மருத்துவமனைகளில் மருத்துவர்களாக பணிபுரியவுள்ள பட்டமேற்படிப்பு முடித்த முதுநிலை மருத்துவர்களுக்கான சுகாதாரச் செயல்பாடுகள் குறித்த பயிற்சியினை மேயர் ஆர்.பிரியா (04.07.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை மற்றும் மருத்துவச் சேவைகள் துறையின் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள், 200 நகர்ப்புர நலவாழ்வு மையங்கள், 16 நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனைகள், 3 மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் ஒரு தொற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றின் மூலமாக பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. தேசிய நகர்ப்புற சுகாதார இயக்ககத்தின் மூலமாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் இயங்கும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புர நலவாழ்வு மையங்கள் மற்றும் நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனைகளில் பொது மக்களுக்கு கூடுதலான சேவைகள் வழங்க தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களை பணியமர்த்தி செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதாரச் சேவைகளை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 155 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு 5 மருத்துவர்கள் பணிமாற்று அடிப்படையிலும், முதுநிலை பயிற்சி முடித்த 150 மருத்துவர்களும் பணியமர்த்த ஆணை பெறப்பட்டது.

இதுவரை 113 முதுநிலை மருத்துவர்கள் பணியில் சேர்ந்துள்ளனர்.இந்த பட்ட மேற்படிப்பு முடித்த முதுநிலை மருத்துவர்கள் 2 ஆண்டு காலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிவர். இவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுசுகாதாரத்துறை மற்றும் மருத்துவத் துறையில் செயல்பட்டு வரும் பல்வேறு சுகாதாரச் செயல்பாடுகள் குறித்த பயிற்சியானது 04.07.2025 முதல் 05.07.2025 ஆகிய இரண்டு நாட்களுக்கு நடைபெறுகிறது. இதில் பெருநகர சென்னை மாநகராட்சி குறித்தும், மருத்துவமனை மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர்மு.மகேஷ்குமார், ஆணையாளர்ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ. ப. ஜெயசீலன், மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் ரமோனா, மண்டல நல அலுவலர்கள், மண்டல மருத்துவ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான நடைபாதையில் மேற்கொள்ளப்படவுள்ள சீரமைப்பு பணிகளை துணை மேயர் மகேஷ் குமார் ஆய்வு செய்தார். உடன் மண்டல குழு தலைவர் மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் மங்கை, கண்காணிப்பு பொறியாளர்கள் சீனிவாசன், திருமுருகன், செயற்பொறியாளர் புருசோத்தமன் உள்ளனர்.



காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவில் அருகே மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் உற்பத்தி செய்யும் பொருட்களை அங்காடியில் இருந்தே நேரடியாக விற்பனை செய்யும் மையத்தை, மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி, எம்.எல்.ஏ. எழிலரசன் ஆகியோர் நேற்று திறந்து வைத்து விற்பனையை துவக்கி வைத்தனர். மேயர் மகாலட்சுமி, மகளிர் திட்ட இயக்குனர் பிச்சாண்டி, ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் மலர்கொடி ஆகியோர் உடன் இருந்தனர்.

# சென்னையில் பல்வேறு காவல் நிலையங்களில் கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த 3 குற்றவாளிகள் கைது

**சென்னை ஜூலை 05-**

சென்னையில் பல்வேறு காவல் நிலையத்தில் கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த மூன்று பேரை போலிசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்

சிந்தாதிரிபேட்டை காவல் நிலையத்தில் கடந்த 24.05.2022 அன்று பாலசந்தர் என்பவரை கொலை செய்த வழக்கில் எதிரி கலை (எ) கலைராஜ், பெரும்பாக்கம், சென்னை என்பவர் உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள 6 வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்த காரணத்தினால், எதிரி கலை (எ) கலைராஜ் மீது கடந்த 19.06.2025 அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. சிந்தாதிரிபேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல்குழுவினர் எதிரி கலை (எ) கலைராஜ், என்பவரை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டது.

இதே போல்மீன்பிடி துறைமுகம் காவல் நிலையத்தில் கடந்த 2019ம் ஆண்டு ஜான்சன் என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் எதிரி சரவணன், தண்டையார்பேட்டை, சென்னை என்பவர் அல்லிக்குளம், 20வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்த காரணத்தினால், எதிரி சரவணன் மீது கடந்த 03.02.2025 அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. மீன்பிடி துறைமுகம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான போலீசார் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தேடிவந்த நிலையில் மீன்பிடி துறைமுகம், பழையவார்ப்பு பகுதியில் கண்காணித்து எதிரி சரவணன், என்பவரை கைது செய்துநீதிமன்றத்தில் ஆஜர் செய்து, நீதிமன்றபிடியாணை நிறைவேற்றப்பட்டது.

இதே போல் சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் கடந்த 2016ம் ஆண்டு தாக்கலான கொலை வழக்கில் எதிரி வெள்ளைமதன் (எ) மதன்குமார், திருவொற்றியூர், சென்னை என்பவர் உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள 7வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்த காரணத்தினால், எதிரி வெள்ளை மதன் (எ) மதன்குமார் மீது கடந்த 17.10.2024 அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. சைதப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல்குழுவினர் எதிரி வெள்ளைமதன் (எ) மதன்குமார், என்பவரை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டது.



சென்னை தீவுத்திடலில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.115 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காட்சி மையத்தின் முன்னேற்றப் பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார். இதில் சி.எம்.டி.ஏ. உறுப்பினர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர்சிவஞானம், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, மண்டல அலுவலர் சொக்கலிங்கம் செயற்பொறியாளர்கள்ராஜன்பாபு, லோகேஷ்வர் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அரும்பாக்கம் , ராயப்பேட்டை ஆகிய பகுதிகளில் போதை பொருள் கடத்திய வழக்கில் மேலும் மூன்று பேர் கைது

**சென்னை ஜூலை 05-**

அரும்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் கடந்த 30ந் தேதி அன்று, அரும்பாக்கம், நூறு அடி சாலை அருகே கண்காணித்து, சட்டவிரோதமாக மெத்தபெட்டமைன் போதைப்பொருள் வைத்திருந்த 1.அந்தோணி ரூபன், 2.தீபக்ராஜ் ஆகிய இருவரை கடந்த 01.07.2025 அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்., அவர்களிடமிருந்து 14.2 கிராம் மெத்தபெட்டமைன், பணம் ரூ.12,000/-, 2 செல்போன்கள் மற்றும் 2 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் 3.இமானுவேல் ரோஹன், ஆகிய மூன்று பேரை ஏற்கனவே சிறையில் அடைத்தனர் இந்த நிலையில் தலைமவைவாக இருந்த குற்றவாளியை காவல்குழுவினர் மற்றும் அரும்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து, மேற்படி குற்ற சம்பவத்தில் தொடர்புடைய தலைமறைவு எதிரிகள் அரவிந்த் பாலாஜி, சுபாஷ், ஆகிய 2 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1 ஐபோன் உட்பட 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி அரவிந்த் பாலாஜி என்பவர் மீது ஏற்கனவே 2 கஞ்சா வழக்குகளும், எதிரி சுபாஷ் மீது 1 கஞ்சா வழக்கு உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப்பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதே போல் இராயப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து கண்காணித்து, மெத்தம்பெட்டமைன் போதைப் பொருளை வைத்திருந்த 1.யாசர் அராபாத், 2.முகமது ரதீட், 3.முகமது ஹாரீஸ், 4.அஸ்வத்கான், ஆகிய 4 பேரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டனர். மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரிகளை போலீசார் தீவிரமாக தேடிவந்தனர்.இந்நிலையில் மற்றும் இராயப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து தீவிர தேடுதலில் ஈடுபட்டு வந்த நிலையில், மேற்படி வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரி முகமதுஜெசிம், என்பவரை நுங்கம்பாக்கத்தில் வைத்து கைது செய்து அவரிடமிருந்து 0.45 கிராம் மெத்தம் பெட்டமைன் பறிமுதல் செய்யப்பட்டது.. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட தலைமறைவு குற்றவாளியை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர்.

கைது செய்யப்பட்ட எதிரி முகமதுஜெசிம் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# எழும்பூர் பகுதியில் நகை வியாபாரியை கடத்தி பணம் மற்றும் தங்க நகைகளை பறித்த வழக்கில் 6 பேர் கைது

**சென்னை ஜூலை 05-**

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, சோமுதெருவில் வசித்து வரும் ரவிச்சந்திரன், ன்பவர் நகை வியாபாரம் செய்து வருகிறார். இவர் கடந்த 26.ந் தேதி அன்று சென்னையில் நகைகளை கொள்முதல் செய்து விட்டு இரவு சுமார் 7.40 மணியளவில் எழும்பூர், பாந்தியன் ரோடு, இருதய ஆண்டவர் சர்ச் அருகே சுமார் 131 கிராம் தங்க நகைகள், 1.250 கிலோ வெள்ளிப் பொருட்கள், பணம் ரூ.31,39,045/- அடங்கிய பையுடன் பேருந்துக்காக காத்திருந்த போது, அங்கு காரில் வந்த சிலர் மேற்படி ரவிச்சந்திரனை வலுக்கட்டாயமாக காரில் ஏற்றி கடத்தி சென்று அவரிடமிருந்த தங்க நகைகள், வெள்ளிப்பொருட்கள் மற்றும் பணத்தை பறித்துக்கொண்டு ரவிச்சந்திரனை போரூர் அருகே காரிலிருந்து கீழே இறக்கி விட்டு தப்பிச்சென்றனர். இது குறித்து ரவிச்சந்திரன்.

எழும்பூர் காவல்நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின் பேரில், இணை ஆணையர் கிழக்கு ஆலோசனையின் பேரில், திருவல்லிக் கேணி துணை ஆணையர் கண்காணிப்பில், எழும்பூர் உதவி ஆணையர் மற்றும் எழும்பூர் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையில் தனிப்படைகள் அமைக்கப்பட்டது.

தனிப்படை காவல் குழுவினர் பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணை செய்து மேற்டி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.பிரபு (எ) கமல், 2.முத்து ராமலிங்கம்,3.தீனா (எ) தினகரன், 4.பிரேம்குமார், 5.முத்துலிங்கம், 6.பிரபு, ஆகிய 6 பேரை சிவகங்கை மற்றும் மானாமதுரையில் வைத்து கைது செய்தனர். அவர்களிடமிருந்து 203 கிராம் தங்க நகைகள், வெள்ளி கட்டிகளுடன் 3.2 கிலோ வெள்ளிப்பொருட்கள், பணம் ரூ.6.50 லட்சம் மீட்கப்பட்டது. குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய 7 செல்போன்கள் மற்றும் 1 கார் பறிமுதல் செய்யப்பட்டது.

போலீசாரின் விசாரணையில் புகார்தாரர் ரவிச்சந்திரன் வாரத்தில் 3 நாட்கள் சென்னை, சௌகார்பேட்டை வந்து நகைகளை வாங்கி விட்டு, ஆட்டோவில் எழும்பூருக்கு சென்று தனியார் பேருந்தில் காரைக்குடிக்கு செல்வதை, ஒரு வாரமாக மேற்கண்ட எதிரிகள் நோட்டமிட்டு, சம்பவத்தன்று ரவிச்சந்திரனை காரில் பின்தொடர்ந்து கடத்திச்சென்று கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது தெரியவந்தது. மேற்படி வழக்கில் தொடர்புடைய தலைமறைவு குற்றவாளியை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர்.

# பிஎஸ்என்எல்-க்கு ரூ.49 லட்சம் டெலிபோன் பில் பாக்கி: 19 ஆண்டு தலைமறைவான 2 தொழிலதிபர்கள் கைது

**சென்னை ஜூலை 05-**

சென்னை கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் கடந்த 2003ம் ஆண்டு சையது இப்ராஹிம் (55) என்பவர் 'எக்ஸ் செல் நெட்வொர்க்' என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வந்தார்.அதேபோல் சென்னை பாரிமுனையில் 'அக்ஸெஸ்' என்ற பெயரில் அவரது நண்பரான முகமது தாஹா யாசீன் ஹமீம் (52) என்பவர் நிறுவனம் நடத்தி வந்தார். தொழிலதிபர்களான இருவரும் தங்களது நிறுவனத்திற்கு ஒன்றிய தொலைத்தொடர்பு நிறுவனமான பிஎஸ்என்எல் நிறுவனத்தில் 34 டெலிபோன் இணைப்புகள் பெற்றனர். அதன் பிறகு இழப்பு காரணமாக 2 நிறுவனத்தையும் மூடிவிட்டனர். ஆனால், நிறுவன பயன்பாட்டிற்காக வாங்கப்பட்ட 34 இணைப்புக்கான டெலிபோன் பில் கட்டாமல் ஏமாற்றிவிட்டனர்.இதுகுறித்து பிஎஸ்என்எல் நிறுவனம் சார்பில் கடந்த 26.3.2003ம் ஆண்டு சென்னை மாநகர காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டது.

அதன்படி, மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து இரண்டு தொழிலதிபர்களான சையது இப்ராஹிம் மற்றும் முகமது தாஹா யாசீன் ஹமீம் ஆகியோரை கைது செய்து சிறையில் அடைத்தனர். பின்னர் நீதிமன்ற பிணையில் இருவரும் வெளியே வந்தனர்.அதனை தொடர்ந்து 2 பேர் மீதும் மத்திய குற்றப்பிரிவு போலீசார் மோசடி வழக்கில் சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து விசாரணை நடத்தி வந்தனர். இதற்கிடையே பிணையில் வெளியே வந்த 2 பேரும் தலைமறைவாகிவிட்டனர். பிறகு கடந்த 2006ம் ஆண்டு இருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்று பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.அதன் பிறகு 2 பேரும் எங்கு உள்ளார்கள் என்று தெரியாத நிலையில் வழக்கு மத்திய குற்றப்பிரிவு போலீசாரால் கிடப்பில் போடப்பட்டது. .அதைதொடர்ந்து கடந்த 19 ஆண்டுகளாக நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த 2 தொழிலதிபர்களையும் மத்திய குற்றப்பிரிவு போலீசார் அதிரடியாக கைது செய்தனர்.



மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 148 வது வார்டு நெற்குன்றம் பாலவிநாயகர் நகரில் நகர்புற நலவாழ்வு மையத்தினை மாமன்ற உறுப்பினர் வி.வி.கிரிதரன் திறந்து வைத்தார்.



வளசரவாக்கம் மண்டலம் ராமாபுரம் வள்ளுவர் சாலையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் மழை நீர் வடிகால்வாய் பணியினை மாமன்ற உறுப்பினர்கள் ராமாபுரம் வ.செல்வகுமார், கே.ராஜூ ஆகியோர் ஆய்வு செய்தனர். உடன் வட்ட செயலாளர் ஆ.ராதா செல்வம் மற்றும் பலர் உள்ளனர்.

# இருசக்கர வாகனத்தை திருடமுயன்ற சிறுவனுடன் வாலிபர் கைது

**சென்னை ஜூலை 05-**

சென்னை, மண்ணடி, கிருஷ்ணன் கோயில் தெருவில் வசித்துவரும் முகமது ஷெரிப், நேற்று முன் தினம் காலை வெளியே செல்வதற்காக வீட்டின் முன்பு நிறுத்தப்பட்டிருந்த அவரது இருசக்கர வாகனத்தை எடுக்க வந்த போது, அங்கு 2 பேர் அவரது இருசக்கர வாகனத்தின் ஹேண்ட் பாரை உடைத்து திருட முயன்றுள்ளனர். இது குறித்து முகமது ஷெரிப் வடக்கு கடற்கரை காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். துறைமுகம் உதவி கமிஷ்னர் பி.ராஜசேகரன்,வடக்கு கடற்கரை காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் ஆகியோரின் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிய சஞ்சய், என்பவரை கைது செய்தனர். மேலும் 16 வயது இளஞ்சிறாரிடம் விசாரணை செய்தனர். அவர்களிடமிருந்து இருசக்கர வாகனத்தின் சாவி மற்றும் 1 திருட்டு செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது.

# கபாலீஸ்வரர் கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை ஜூலை 05-**

சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட செய்தி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அவ்வப்போது இதுபோன்ற போலியான வெடிகுண்டு மிரட்டல்கள் வந்தாலும், ஒவ்வொரு மிரட்டலையும் சாதாரணமானதாக கருதாமல், வெடிகுண்டு நிபுணர்கள் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலுக்கு இ-மெயில் மூலம் மர்ம நபர்கள் நேற்று காலை வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளனர்.இதுகுறித்து கோயில் ஊழியர்கள் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். தகவலறிந்த போலீசார் மற்றும் வெடிகுண்டு நிபுணர்கள் மோப்ப நாயுடன் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். கபாலீஸ்வரர் கோயிலுக்குள் மோப்ப நாயை பயன்படுத்தி கோயில் முழுவதும் தீவிர சோதனை நடத்தினர்.

# கல்லூரி மாணவர்கள் 10 பேர் மீது வழக்குப்பதிவு

**சென்னை ஜூலை 05-**

சென்னையில் மருத்துவக் கல்லூரி மாணவர்களை தாக்கிய சம்பவத்தில் பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த 10 மாணவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. சென்னையில் ரூட் தல விவகாரத்தில், மாநிலக் கல்லூரி மாணவர்கள் பச்சையப்பன் கல்லூரிகள் அடிக்கடி மோதிக்கொள்வது தொடர்கதையாகி வருகிறது.

அந்த வகையில், நேற்று யுனானி மருத்துவக் கல்லூரி மாணவ மாணவிகள் பேருந்தில் பயணம் செய்தபோது பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் கிண்டல் செய்ததாக கூறப்படுகிறது. தட்டிக் கேட்ட யுனானி மருத்துவக் கல்லூரி மாணவர்களை பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் தாக்கியுள்ளனர். புகாரின் பேரில் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் 10 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

